


# மாணவர்களுக்கு திறனறிதல் போட்டி

கும்மிடிப்பூண்டி, பிப்.2–

மகாத்மாகாந்தி நினைவு தினத்தை முன்னிட்டு கும்மிடிப்பூண்டியை அடுத்த புது கும்மிடிப்பூண்டியில் உள்ள காந்திஉலகம் அறக்கட்டளை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு திறனறிதல் போட்டிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு அறக்கட்டளை தலைவர் விஜயலட்சுமி தலைமை தாங்கினார். நிறுவனர் எம்.எல்.ராஜேஷ், வக்கீல் ஷ்யாம்சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரமோத் ஜெயின் பரிசுகளை வழங்கினார்.